MCOP 23/2017

எ.ம.சா.1 சபாபதி த/பெ கண்ணன்

நாள் 17.06.2025

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த மனுவில் எனது தரப்பில் வழக்கறிஞர் மூலம் பதில் தாக்கல் செய்துவிட்டேன். நான் சொன்ன விவரங்கள் அடிப்படையில் தான் பதில் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது பதில் உரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பதில் உரையில் உள்ள விவரங்களை எனக்கு படித்து காண்பித்தார்கள். எனது பதில் உரையில் பத்தி 5ல் இறந்து போன மறவன் என்னிடம் டிராக்டரில் கிளினீராக தினக்கூலியாக வேலை செய்ததாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பதில் உரையில் பத்தி 4ல் சொல்லியுள்ள வேலைகளை மறவன் செய்வார் என்றால் சரிதான். விவசாய வேலை பயன்பாட்டிற்கு டிராக்டருக்கு பர்மீட் தேவை இல்லை என்றால் சரிதான். ஆறுமுகம் நிலத்திற்கு செல்லும் பாட்டையில் டிராக்டர் சென்ற போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு சொந்தமான பாட்டையை தான் நான் ரோடு என்று சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். எனது டிராக்டருக்கு 6 நபர்களுக்கு கூடுதலாக ரூ.100/- கூடுதல் பிரீமியம் தொகை செலுத்தி இருக்கிறேன் என்றால் சரிதான். (நீதிமன்ற கேள்வி கூடுதலாக செலுத்திய பிரீமியம் எதற்கானது என்றால் சாட்சி டிரெய்லருக்கும் தனியாக உண்டு டிராக்டருக்கும் தனியாக உண்டு என்று பதில் அளித்தார்). ம.சா.ஆ6 டிராக்டருக்கு உண்டானது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் டிராக்டர் மட்டும் தான் எடுத்து சென்றேன் டிரெய்லர் எடுத்து செல்லவில்லை. இறந்துபோன மறவனுக்கு தினக்கூலியாக ரூ.400/- லிருந்து ரூ.500/- வரை கொடுப்பேன் என்றால் சரிதான். என்னால் சக்கரத்தை கழட்ட முடியாது என்பதால் மறவனை கிளினராக வைத்திருந்தேன் என்றால் சரிதான். நான் கூலி ஆட்களுக்காக கூடுதல் பிரீமியம் செலுத்தி இருப்பதால் காப்பீட்டு நிறுவனம் தான் காப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

1. எனது பதில் உரையில் உள்ள ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை**

1. பதில் உரையில் உள்ள விவரங்களை என் வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்தார்.